www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## ஏழாம் வகுப்பு

## சமூக அறிவியல்

பதிவு எண் :

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: 8 x 1 = 8

1. ______களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.
   அ) சோழர் ஆ) பாண்டியர்
   இ) ராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள்
2. 'பிரிதிவிராஜ ராசோ' என்னும் நூலை எழுதியவர் யார்?
   அ) கல்ஹணர் ஆ) விசாகதத்தர்
   இ) ராஜசேகரர் ஈ) சந்த் பர்தை
3. நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு ______ விளிம்பின் அருகில் ஏற்படுகிறது.
   அ) மலை ஆ) சமவெளிகள்
   இ) தட்டுகள் ஈ) பீடபூமிகள்
4. கூற்று : கடல் வளைவுகள் இறுதியில் கல்தூண்களாகின்றன.
   காரணம் : கடல் தூண்கள் அலைகளின் படிவுகளால் ஏற்படுகின்றது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆ) கூற்று சரி காரணம் தவறு
   இ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
5. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் வயது
   அ) 21 ஆ) 18 இ) 25 ஈ) 31
6. இந்தியாவில் காணப்படும் கட்சி முறை
   அ) ஒரு கட்சி முறை ஆ) இரு கட்சி முறை
   இ) பல கட்சிமுறை ஈ) இவற்றுள் எதுவுமில்லை
7. முதன்மைக் காரணிகள் என்பன ______.
   அ) நிலம், மூலதனம் ஆ) மூலதனம், உழைப்பு
   இ) நிலம், உழைப்பு இ) எதுவுமில்லை
8. தொழில்முனைவோர் என அழைக்கப்படுபவர்
   அ) பரிமாற்றம் செய்பவர் ஆ) முகவர்
   இ) அமைப்பாளர் ஈ) தொடர்பாளர்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 6 x 1 = 6

1. விக்ரமசீலா பல்கலைக் கழகத்தை தோற்றுவித்தவர் ______ ஆவார்.
2. எரிமலைகளின் அறிவியல்பூர்வமான ஆய்வுகளை ______ என அழைக்கின்றனர்.
3. உலகின் மிக நீண்ட கடற்கரை ______ ஆகும்.
4. ஜெர்மனியில் காணப்படும் சர்க் ______ என்று அழைக்கப்படுகிறது.
5. ______ முதல் ______ வரையிலான இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவுகள் சமத்துவ உரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றன.
6. மக்களாட்சியின் முதுகெலும்பாகத் திகழ்வது ______.

III. சரியா? தவறா? 3 x 1 = 3

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.
2. 'ராஜபுத்ர' என்பது ஒரு லத்தீன் வார்த்தை ஆகும்.
3. அபு குன்றில் அமைந்துள்ள கோவில் சிவபெருமானுக்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



IV. a) தவறான இணையைக் கண்டறியவும். 1 x 1 = 1

அ) மதுரா விஜயம் - கங்காதேவி

ஆ) அபுல் பாசல் - அயினி அக்பரி

இ) இபன் பதூதா - தாகுயூக்-இ-ஹிந்த்

ஈ) அமுக்தமால்யதா - கிருஷ்ணதேவராயர்

b) பொருந்தாததை வட்டமிடுக: 3 x 1 = 3

1. மேலோடு, மாக்மா, புவிக்கருவம், கவசம்
2. நிலநடுக்க மையம், நிலநடுக்க மேல் மையப்புள்ளி, எரிமலை வாய், சிஸ்மிக் அலைகள்
3. லாவா, எரிமலை வாய், சிலிக்கா, எரிமலைப் பள்ளம்

V. பொருத்துக: 5

1. கஜீராகோ - அபு குன்று
2. சூரியனார் கோவில் - பந்தல்கன்ட்
3. தில்வாரா கோவில் - கொனாரக்
4. நிலநடுக்கம் - ஜப்பானிய சொல்
5. கென்யா மலை - உலக எரிமலைகள்

VI. சுருக்கமான விடையளி: 7 x 2 = 14

(ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்)

1. நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?
2. ஏதேனும் நான்கு ராஜபுத்திரக் குலங்களின் பெயர்களை எழுதுக.
3. நிலநடுக்கம் - வரையறு.
4. செயல்படும் அடிப்படையில் மூன்று எரிமலைகளின் பெயர்களை எழுதுக.
5. அ) சியால் மற்றும் சீமா - வேறுபடுத்துக.

   ஆ) காரணம் கூறுக :

   கண்டங்களின் மேலோடு கடலின் மேலோடை விட அடர்த்தி குறைவு.
6. சமத்துவம் என்றால் என்ன?
7. குடிமை சமத்துவம் என்றால் என்ன?
8. மூன்று வகை கட்சி முறைகளைக் குறிப்பிடுக.
9. உற்பத்தி என்றால் என்ன?
10. உழைப்பு - வரையறு.

VII. விரிவான விடையளி: 2 x 5 = 10

(ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும்)

1. டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.
2. நிலநடுக்கத்தின் விளைவுகள் பற்றி எழுதுக.
3. அரசியல் கட்சியின் செயல்பாடுகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.
4. உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக.

******

Scanned with CamScanner

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com